# எங்கள் கல்வி; எங்கள் உரிமை!

# என்ன சொல்கிறது 'தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை - 2025' - பள்ளிக் கல்வி!

## 'எல்லார்க்கும் எல்லாம்' எனும் சமத்துவம் போற்றும் 'திராவிட மாடல்' கல்விக் கொள்கை!







ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அச்சாணியாக விளங்குவது கல்வி. பாடங்கள் குறித்த அறிவை வழங்குவது மட்டுமல்ல; ஒரு தனிமனிதனை முழுமையான, ஆளுமைத்திறன்மிக்க குடிமகனாக உருவாக்குவதே சிறந்த கல்வி. இந்த உயரிய நோக்கத்துடன், தமிழ்நாட்டின் எதிர்காலத் தலைமுறையினரை நவீன உலகின் மாற்றங்களை நோக்கித் தயார்படுத்தும் வகையில் தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ்நாடு அரசு, பள்ளிக் கல்விக்கான மாநில கல்விக் கொள்கையை வகுத்திருக்கிறது.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் நம் மாநில கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டின் 234 தொகுதிகளிலும் பள்ளிகள் சார்ந்த 77 பொருண்மைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொண்ட கள ஆய்வுகள், வெளிநாட்டுப் பயணங்களில் பெற்ற அனுபவங்கள் ஆகியவற்றின் சாரத்தையும் நமது மாநில கல்விக் கொள்கை உள்ளடக்கியிருக்கிறது.

முழுமையான அணுகுமுறையுடன் நமது மாநிலக் கல்விக் கொள்கை வடிவமைக்கப் படக் காரணமாக இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம். மாநில கல்விக் கொள்கையை வகுத்தளித்த குழுவினருக்கும் பல்வேறு விதங்களில் அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கல்வி சிறந்த தமிழ்நாட்டை மென்மேலும் மேம்படுத்த உழைத்துவரும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சருக்கும் மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பள்ளிக் கல்விக்கான தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை பல தனித்துவமான மற்றும் புரட்சிகரமான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அவை பின்வருமாறு:

### 1. இருமொழிக் கொள்கை: தமிழ் + ஆங்கிலம்

தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம்-2006 விதிகளின் கீழ் தாய்மொழி தமிழ் பள்ளிகளில் கற்பிக்கப்படுவதை உறுதி செய்கிறது. அதேசமயம், உலகெங்கிலும் உள்ள நவீனத் தொழில்நுட்பங்கள், மருத்துவம், சட்டம் உள்ளிட்ட தொகுப்புகள், பரிணாம வளர்ச்சிக் கோட்பாடுகள் ஆகியன பெருமளவில் ஆங்கில மொழியிலேயே பதிவாகின்றன. அவற்றை நம் மாணவர்கள் அறிந்துகொள்ளவும் உலகம் முழுவதும் பயணித்திடவும் ஆங்கிலக் கல்வி முக்கியத்துவமாகிறது. எனவே நம் பேரறிஞர் அண்ணா வகுத்திட்ட இருமொழிக் கொள்கையான தமிழ்+ஆங்கிலமே நம் மாணவர்களின் வளர்ச்சிக்கும் உலகத் தொடர்புக்கும் அவசியம் என்பதை உணர்ந்து இருமொழிக் கொள்கையில் உறுதியாக இருக்கிறது நம் திராவிட மாடல் அரசு. அதன் பயனாக புலம்பெயர்ந்தோர் மற்றும் பழங்குடிச் சிறார்களுக்கு இருமொழிக் கல்வி உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.வழி (இயல் 7.6 & 4.8)

**ஆங்கிலப் புலமை:** ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தில் பேசுதல், எழுதுதல், கற்பித்தல் திறன்களை மேம்படுத்தவும் ஆசிரியர்கள் ஆங்கிலப் புலமையோடு விளங்கவும் கட்டமைக்கப்பட்ட தொடர் ஆசிரியர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை முன்மொழிகிறது. (இயல் 7.6)

**எண்ணும் எழுத்தும்:** அடிப்படை எழுத்தறிவு எண்ணறிவு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வகுப்புக்கேற்ற புரிதல், படித்தல் மற்றும் எழுதுதல் திறன்களை அடையச் செய்வதன் வழியாக மாணவர்களின் உலகளாவிய சிந்தனை மற்றும் வளர்ச்சிக்கும் நம் மாநில கல்விக் கொள்கை அடித்தளமிடுகிறது. (இயல்3.2)

**வாசிப்புப் பழக்கம்:** ஆண்டுக்கு 2 நாட்கள் மாவட்ட (அ) சிறப்பு நூலகங்களில் நாள் முழுதும் மாணவச் செல்வங்கள் வாசிப்புக்காகச் செலவிடுவதை உறுதிசெய்கிறது. வாசிப்பின் வழியாகக் கற்பனைத் திறன், சிந்தனைத் தூண்டல் மற்றும் புத்தகங்கள் மீதான ஆர்வத்தை வளர்க்க இது உதவும். (இயல்3:2)

### 2. கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகள்

**STEAM கல்வி:** Science, Technology, Engineering, Arts, Maths ஆகியவற்றைக் கொண்ட STEAM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை, கணிதம்) கல்வி முறை, உள்ளூர்ச் சூழல் மற்றும் சமூக வாழ்க்கையுடன் ஒருங்கிணைந்து கற்பிக்கப்படும். இது மாணவர்களின் புரிதலை மேம்படுத்தி, அவர்களின் திறன்களை அதிகரிக்கும். (இயல்4.14)

**உடற்கல்வி:** மாணவர்களின் உடல் நலம் பேணிட வாரத்திற்கு இரண்டு பாடவேளைகள் உடற்கல்விக்குக் கட்டாயமாக்கப் படும். சிலம்பம், கபடி போன்ற பாரம்பரிய விளையாட்டுகளுடன், கால்பந்து, கூடைப்பந்து போன்ற நவீன விளையாட்டுகளுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படும். இதுபோன்ற கட்டமைக்கப்பட்ட உடற்கல்விப் பாடவேளைகளும் பள்ளியளவில் தொடங்கி மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள், மாணவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம், குழுப்பணி மற்றும் விடாமுயற்சி போன்ற பண்புகளை வளர்க்கும். மாணவர்களின் வயதுக்கேற்ப விளையாட்டு உபகரணங்கள் அங்கன்வாடி மற்றும் தொடக்கப்பள்ளிகளில் வழங்கப்படும். (இயல்4.10 & 4.12)

**அரசியலமைப்புக் கல்வி :** அரசியலமைப்பின் முகவுரை, விழுமியங்கள், அடிப்படை உரிமைகள், சமூகநீதி, சமவாய்ப்பு, சனநாயகப் பங்கேற்பு, வழிகாட்டு நெறிமுறைகள், அடிப்படைக் கடமைகள், குடிமை உணர்வு, பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல், போக்குவரத்துப் பாதுகாப்பு, மாநில மற்றும் தேசிய நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு போன்ற கருத்துகள் மானவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும். ஓர் இந்தியக் குடிமகனாக மாணவர்கள் தங்கள் உரிமைகளையும் கடமைகளையும் பாடத்திட்டங்கள் வழியாகப் புரிந்துகொள்ள நமது மாநிலக் கல்விக் கொள்கை, பாதை அமைத்துத் தந்திருக்கிறது. (இயல் 5.3)

**உலகியல் அறிவும் விழிப்புணர்வும்:** சர்வதேச உறவுகள், பிற நாட்டினரின் பண்பாடுகள் குறித்த விழிப்புணர்வு, நிதி, பொருளாதாரம், சுகாதாரம், சுற்றுச்சூழல், மாணவர் பரிமாற்றத் திட்டங்கள் மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கும் உலகளாவிய அனுபவங்கள், எண்மத் திறன்களை வழங்குவதற்காக சர்வதேச கல்விச் சுற்றுலாக்கள் மூலம் உயர் கல்வி நிறுவனங்களைப் பார்வையிடுகிறார்கள்.(இயல் 1.7.2 & இயல் 5.2)

**நிதிசார் கல்வியறிவு:** தனிநபர் நிதி மேலாண்மை, சேமிப்பு, வங்கி நடைமுறைகள், வரவு செலவுத் திட்டமிடல், வணிகம், பொருளாதாரம், இணையவழிப் பணப்பரிமாற்றம் மற்றும் நிதி மோசடிகள் குறித்த எச்சரிக்கை போன்றவை உயர்தொடக்க நிலையிலேயே அறிமுகப்படுத்தப்படும். வாழும் நகரம், கிராமங்களை அறிந்துகொள்ளும் சட்டகங்கள் வழியாக வங்கிகளைப் பார்வையிட்டு நிதிசார் கல்வியைப் பெறுவது உயர்தொடக்க நிலையிலேயே அறிமுகப்படுத்தப்படுகிறது (இயல் 5.அ 2 & இயல் 5.அ 5)

**சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் கல்வி:** தன்சுத்தம், ஊட்டச்சத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கட்டாயக் காலநிலைப் பாடத்திட்டம், காலநிலைமாற்றம்குறித்தவிழிப்புணர்வு, சூரியசக்திப் பயன்பாடு, கடலோரப் பாதுகாப்பு, நெகிழி பொருட்களை பற்றிய விழிப்புணர்வு ஆகியவை இளம்வயதிலேயே மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும்.

பசுமைப் பள்ளித் திட்டம், நீர் மறுசுழற்சி, கழிவு மேலாண்மை, மரங்கள் நடுதல், கார்பன் தடப் பகுப்பாய்வு, நிலையான நகர்புறத் திட்டமிடல், பசுமைத் தமிழ்நாடு இயக்கம் போன்ற அரசு முயற்சிகளில் துணை புரிதல் உள்ளிட்ட நடைமுறைகள் ஒவ்வொரு பள்ளியிலும் செயல்படுத்தப்படும். வாழ்வியலுக்கான பள்ளிச் சுற்றுச்சூழல் மன்றங்களை நிறுவுவதும் உறுதிசெய்யப்படுகிறது.

**பேரிடர் மேலாண்மைக் கல்வி:** உள்ளூர் பேரிடர் மேலாண்மை அலுவலர்களோடு இணைந்து, வெப்ப அலை மீட்பு, வெள்ளப்பெருக்கின்போது மக்களை வெளியேற்றுதல், புயல் மழையை எதிர்கொள்ள ஆயத்தப்படுத்துதல் உள்ளிட்ட பரவலான உள்ளூர் அபாயங்களுக்குக் காலாண்டு பயிற்சிகள் மாணவர்களுக்குக் கட்டாயமாக வழங்கப்படும். சர்வதேச அளவில் செயல்பாட்டிலிருக்கும் தீ விபத்து முன்னெச்சரிக்கை குறித்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முதலுதவி மற்றும் அவசரகால வெளியேற்றங்களுக்கான கட்டாயப் பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படும். (இயல் 5 ஆ.2, 5 ஆ.4 & 9.2)

### 3. பள்ளிக் கட்டமைப்புகள்

**நவீனமாகும் பள்ளிகள்:** அடுத்த மூன்று ஆண்டுகளில் அனைத்துப் பள்ளிகளிலும் சுகாதாரம், குடிநீர் வசதி, மின்விசிறி, காற்றோட்டமான வகுப்பறை, இருபாலருக்கும் தனித்தனிக் கழிவறைத் தொகுதி, நூலகம், விளையாட்டுத்திடல், அறிவியல் ஆய்வகங்கள், பன்னோக்கு அரங்கங்கள் ஆகியவை அனைத்துப் பள்ளிகளிலும் 100% ஏற்படுத்தப்படவிருக்கிறது. மாற்றுத்திறனாளி மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்படுத்தும் வகையில் சாய்தளம், கைப்பிடிகளைக் கொண்ட கழிவறைகள் மற்றும் வகுப்பறைத் தளவாடங்களும் மேம்படுத்தப்படவிருக்கின்றன. (இயல் 9.1, 9.2, 9.3)

**வெற்றிப் பள்ளிகள்:** மாதிரிப் பள்ளிகள் போலவே ஊராட்சி ஒன்றியம்தோறும் 'வெற்றிப் பள்ளி' என்னும் திட்டத்தின் கீழ் ஒரு சிறந்த பள்ளியைத் தேர்ந்தெடுத்து அவை மேம்படுத்தப்படும். இதன் மூலமாக மாணவர்கள் உயர் தர வரிசையில் உள்ள முன்னணி நிறுவன கல்வி நிறுவனங்களில் சேர்ந்து கல்வி பெற முடியும். (இயல் 1.7.2)

**கவனச் சிதறல் களைவோம்:** கல்வியில் கவனச்சிதறல் ஏற்படாமலிருக்க, பள்ளி வளாகத்தை கைப்பேசி பயன்படுத்தாத வளாகமாக அறிவித்தல். அனைத்துப் பள்ளிகளிலும் குழந்தைநேய மற்றும் பாதுகாப்பு தொடர்பான புகார்களை அளிக்கும் அமைப்புகளை உருவாக்கி, அவசர எண்கள் மற்றும் POCSO தொடர்பான தகவல்கள் தெளிவாகக் காட்சிப்படுத்தப்படும். (இயல் 4.10, 8.4)



தொகுப்பு:
**அ.ராஜா தமிழ்மாறன்**
கழக ஊடக செய்தித் தொடர்பாளர்

### 4. கல்வி பயிற்றுவிக்கும் முறைகள்

**முன்னுரிமை:** கற்றலில் பின்தங்கிய மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களின் கற்றல் இடைவெளியைச் சீர்செய்யவும் குறைதீர் கற்பித்தலை வழங்கவும் சிறப்புக் கவனம் அளிக்கப்படும். பின்தங்கிய பள்ளிகளில் திறன்மிக்க ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். (இயல் 2.1)

**தனிக்கவனம்:** சமூகநலத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வு உள்ளிட்ட துறைகளின் பங்கேற்புடன், குழந்தை களின் வளர்ச்சித் தாமதம், குறைபாடுகள் தொடக்க நிலையிலேயே அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்குத் தனிக்கவனம் செலுத்தப்படும். (இயல் 2.5)

**திறன்பயிற்சி:** மூன்றாம் வகுப்பிற்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எழுத்தறிவு, எண்ணறிவை உறுதிசெய்ய எண்ணும் எழுத்தும் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும். தொடக்கநிலை வகுப்புகளுக்கேற்ப குழந்தைநேயச் செயல்பாடு மற்றும் விளையாட்டு அடிப்படையில் கற்பித்தல் உள்ளிட்ட உத்திகளின் அடிப்படையில் ஆசிரியர்களுக்குத் திறன்பயிற்சி வழங்கப்படும். (இயல் 3.1, 3.3)

**சர்வதேசத் தரம்:** கல்வியின் அடிப்படை மற்றும் சமகாலத் திறன்களை வலுப்படுத்துவதாக மாறும். பள்ளிப்பருவத்தின் ஒவ்வொரு நிலையிலும் மொழி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல், கலை மற்றும் உடற்கல்வி ஆகியவற்றில் வலுவான அடித்தளம் அமைக்கப்படும். தேசிய மற்றும் சர்வதேசத் தரத்திற்கு இணையாக, பாடப்பொருள் சார்ந்த அறிவை மாணவர்கள் பெறுவது உறுதிசெய்யப்படும். (இயல் 5:அ.1)

**டிஜிட்டல் வகுப்பறை:** ஏஐ, ரோபோட்டிக்ஸ், கோடிங், டேட்டா உருவாக்கம் உள்ளிட்டவை பொருத்தமான வகுப்புகளில் TN SPARK திட்டம் மூலம் விரிவான பாடங்களாக்கப்படும். கற்றல் விளைவுகளை மேம்படுத்த விர்ச்சுவல் ரியாலிட்டி (VR), ஆக்மெண்டட் ரியாலிட்டி (AR), ஸ்மார்ட் போர்டு என காலமாற்றத்துக்கு ஏற்ப டிஜிட்டல் தொழில்நுட்பங்களுடன் வகுப்பறைகள் மாற்றமடையும். (இயல் 5.5.இ)

**தொழிற்கல்வி:** மேல்நிலைப் பள்ளிகளில் உள்ளூர் தொழில் தேவைகள் வளரும் துறைகளுக்கேற்ப, தொழிற்கல்வி வாய்ப்புகள் விரிவான முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு, மாணவர்களுக்குத் திறன் மற்றும் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும். (இயல் 4.7)

**கலைகள்:** ஓவியம், வண்ணம் தீட்டுதல், சிற்பம், கைவினை, நிகழ்த்து கலை - இசை, நடனம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள், தற்காலக் கலை-மின்னணுவியல், புகைப்படக் கலை உள்ளிட்டவை பாடத்திட்டங்களில் இணைக்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் போட்டிகளும் கண்காட்சிகளும் நடத்தப்படும். (இயல் 4.7, 4.11)

### 5.சமத்துவம் - சமூகநீதிக் கல்விமுறை

**பெண் கல்வி:** வளரிளம் மாணவி களுக்கு பாலின சமத்துவம் மற்றும் இணையப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு, தற்காப்பு மற்றும் வாழ்க்கைத் திறன்சார் சமூக சவால்களை எதிர்கொண்டு, முடிவெடுக்கும் திறன் அளிக்கும் பாடத் திட்டங்கள், கலைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். (இயல் 2.4)

**சீரிய கண்ணோட்டம்:** சமத்துவம், சமூகநீதி, பாலின சமத்துவம் உள்ளடக்கிய பாடத்திட்டங்கள் வழியாக, சாதி, பாலினம், இயலாமை மற்றும் பன்முகத்தன்மை குறித்த சீரிய கண்ணோட்டத்துடன் கல்விமுறை மேம்படுத்தப்படும். (இயல் 4.2)

**சமூக ஒருங்கிணைப்பு:** பல்வேறு பின்னணிகளிலிருந்து வரும் குழந்தைகள் ஒருவருக்கொருவர் மரியாதையுடன் பழகவும், ஒன்றிணைந்து கல்வி கற்கவும் 'சமூக ஒருங்கிணைப்பு மாதிரி நிறுவனங்'களாகப் பள்ளிகள் உருமாற்றமடையும். (இயல் 8.1)

### 6. மதிப்பீட்டு முறைகள்

**மதிப்பீட்டு முறை:** மனப்பாட முறையிலிருந்து விடுபட்டு, மாணவர்களின் புரிதல், சிந்தனைத் திறன் மற்றும் படைப்பாற்றலை மதிப்பிடும் புதிய மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்படும். திறந்தநிலை வினாக்கள், குழு மதிப்பீடுகள், வாய்வழித் தேர்வுகள் போன்றவை ஊக்குவிக்கப்படும். (இயல் 6.1 & 6.2)

**தேர்ச்சிக் கொள்கை:** 1 முதல் 8-ம் வகுப்பு வரை தேக்கமின்மைக் கொள்கை தொடரும். 10 மற்றும் 12-ம் வகுப்புகளுக்கு மட்டுமே பொதுத் தேர்வுகள் நடத்தப்படும். 11-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு ரத்தாகிறது. 9 மற்றும் 11-ம் வகுப்புகள் பொதுத் தேர்வுக்கான பயிற்சிக்கு மாணவர்கள் தயாராக வாய்ப்பளிக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறு வேகத்தில் கற்கிறது. மாணவர்களின் கற்றலில் ஏற்படும் குறைகளுக்காக அவர்களைத் தண்டிக்காமல் அவர்களின் கற்றலை மேம்படுத்தவே முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**ஆசிரியர் மேம்பாடு :** தண்டனை களற்ற மதிப்பீட்டு முறைகளை ஆசிரியர்கள் தங்களுடன் பணியாற்றும் ஆசிரியர்களோடு ஒருங்கிணைந்து உருவாக்கிய, மதிப்பீட்டு குறிகாட்டிகள், வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகள், செயல்திட்ட அடிப்படையிலான மதிப்பீடு உள்ளிட்ட நடைமுறைகளைச் செயல்படுத்திப் பார்க்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாடு, தமிழ்நாட்டின் கல்வி மாற்றத்திற்கான மையமாக இருக்கிறது. உயர்தரச் சீர்திருத்தங்களை உள்ளடக்கி, எதிர்காலத்துக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் பணித்திறன் மேம்பாடு கொண்ட ஆசிரியர் சமூகத்தை உருவாக்குவதே மாநில கல்விக் கொள்கையின் நோக்கம். (இயல் 6.5 & 7.3)

மாணவர்களின் சமூக ஊடகப் பயன்பாடு, போதைப்பொருள் பயன்பாட்டினை தடுத்தல் சார்ந்த விழிப்புணர்வு மற்றும் மாணவர் பாதுகாப்புச் செயல்முறைகள் ஆகியவற்றில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுவார்கள். (இயல் 7.5)

**மாநில அளவிலான ஆய்வுகள்:** மாணவர்களின் தனித்திறன் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டு, அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். அனைத்து வாரியங்கள் மற்றும் மேலாண்மைக்கு உட்பட்ட பள்ளிகளில் மாநில அளவிலான ஆய்வுகள் (SLAS) குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்தப்பட்டு, மாணவர்களின் கற்றல் வளர்ச்சி மேம்படுத்தப்படும். (இயல் 3.7)

### 7. வாழ்வியல், சமூகப்பொறுப்புகள்

**வேர்களை உறுதிப்படுத்துதல்:** புவியியல், வரலாறு, பண்பாடு, நாகரிகம் ஆகியவை பற்றிய பாடங்களோடு சுற்றுப்புறம் குறித்த கல்வி கட்டாயமாக்கப்படும். இதற்காக, 'என் கிராமத்தை அறிதல் - என் நகரத்தை அறிதல் - என் மாநிலத்தை அறிதல்' போன்ற கட்டகங்களில் கட்டாயமாக அறிமுகப்படுத்தப்படும்.

உள்ளூர் விழாக்கள், அவசரகால முதலுதவி, குழந்தைப் பாதுகாப்பு, நாட்டுநலப்பணி, போதைப்பொருள் தடுப்பு, சமூக ஊடகப் பயன்பாடு, மாணவர் பாதுகாப்பு, புகாரளித்தல் உள்ளிட்ட விழிப்புணர்வுப் பயிற்சிகள் அளிக்கப்படும். (இயல் 5.2, 5.5, 7.5, 8.4)

**குழந்தைகள் பாதுகாப்பு:** குழந்தை களின் பாதுகாப்பு, தனிப்பட்ட எல்லைகள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி ஊழியர்களுக்கான POCSO விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் புகார் அளித்தல் குறித்துப் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு பள்ளியிலும் பயிற்சி பெற்ற உறுப்பினர்களுடன் கூடிய குழந்தைப் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்படும். இது தொடர்பான புகார்களை உணர்வுப்பூர்வமாகக் கையாளவும் குழந்தை நல அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வும் பயிற்சியளிக்கப்படும். (இயல் 8.4)

### 8. பெற்றோர் மற்றும் சமூகப் பங்கேற்பு

**உடலியக்கச் செயல்பாடு:** வீடு சார்ந்த உடலியக்கத் திறன் செயல்பாடுகளை மேம்படுத்தவும், பெற்றோர்களுக்கு உதவும் வகையிலும் துணிகளை மடித்தல், தோட்டத்தில் விளையாடுதல் போன்ற சிறுசிறு வீட்டுச் செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுகிறது. (இயல் 4.12)

**பெற்றோரும் ஆசிரியர்களும்:** கல்வி முறையின் வெற்றிக்கு பெற்றோர் மற்றும் சமூகத்தின் பங்கு இன்றியமையாதது. மாணவர்களின் முன்னேற்றம் குறித்த தகவல்கள் பெற்றோர்-ஆசிரியர் சந்திப்புகள் மற்றும் இணையச் செயலிகள் மூலம் தொடர்ந்து பகிரப்படும்.

**கூட்டமைப்பு:** பெற்றோர் - ஆசிரியர் கழகங்கள் (PTA), பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMC), முன்னாள் மாணவர் கூட்டமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து பள்ளிகளுக்குத் தேவையான வளங்களை உருவாக்கவும், சமூக காவல் மற்றும் விற்பனையாளர்களைக் கொண்டு பள்ளிக்கு அருகில் போதைப் பொருள் நடமாட்டத்தைத் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மீளாய்வுக் கூட்டங்கள்:** குழந்தைத் திருமணம், போன்ற சமூகப் பிரச்சினைகளில் தீர்வுகளை உருவாக்கவும் குழந்தைகள் உரிமைகள் தொடர்பான குறைதீர் வகுப்புகள், சமூகக் கூட்டங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தலைமையில், காலாண்டு மீளாய்வுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும். (இயல் 4.12, 6.ஊ, 8.4, 8.9, 8.10, 10.4)

### 9. மாணவர் நலத் திட்டங்கள்

**நலத்திட்டங்கள்:** மாநில அரசின் பல்வேறு நலத் திட்டங்களான காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண், நான் முதல்வன், தமிழ்ப் புதல்வன், பஸ் பாஸ், சீருடை, பாடப்புத்தகங்கள், விழுதுகள், நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NSNOP) போன்ற 70-க்கும் மேற்பட்ட சீர்மிகு திட்டங்கள் மாநில கல்விக் கொள்கையின் கீழ் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டிருக்கின்றன. சர்வதேச மற்றும் தேசிய அளவிலான முதன்மை கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் மற்றும் பயணச்செலவினை அரசே ஏற்கும் புரட்சிகரமான திட்டங்கள் கல்விக் கொள்கையுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. (இயல் 10)

தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை-2025 பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்ட கல்விமுறையிலிருந்து, கற்போரை மையமாகக்கொண்ட திறன்சார்ந்த கல்விமுறைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. மாணவ சமுதாயத்தை சமத்துவமான, பொறுப்புள்ள குடிமக்களைக் கொண்டதாக உருவாக்கும் மகத்தான கொள்கை ஆயுதமாக, எல்லார்க்கும் எல்லாம் எனும் சமத்துவம் போற்றும் சமூக நீதி ஆயுதமாக நமது திராவிட மாடல் கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. திராவிட மாடல் அரசின் இந்தப் புதிய கல்விப் பயணம் எதிர்காலத் தலைமுறைக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்யும்.